**ONE TWO ACADEMY**

**12 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 5**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

2. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் ________ பயின்று வந்துள்ளது.

அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்ப டிமம் ஈ) உருப்படிமம்

3. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல , அது நம்பிக்கை மையம் - காரணம் -

அ) நேரடி, மறை முக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன் பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

4. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

5. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு

இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

6. 'மதர்கயல் மலைப்பின் அன்ன' - என்பதில் 'கயல்' என்னும் சொல்லின் பொருள்

அ) மீன் ஆ) விழி இ) விண்மீன் ஈ) இவற்றில் எதுவுமில்லை

7. ‘தலைக்குளம்’ என்னும் கதையின் ஆசிரியர்

அ) பீர்முகமது ஆ) தோப்பில் முகமது மீரான்

இ) அப்துல் ரகுமான் ஈ) ஜெயகாந்தன்

8. ‘கட்டில் நிணக்கும் இழிசினன் கையது’ என்னும் புறநானூற்றில் அமைந்துள்ள படிமம்

அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம்

இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

9. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படுவது

அ) திருப்பதி ஆ) சென்னை

இ) திருவனந்தபுரம் ஈ) கன்னியாகுமரி

10.வள்ளலாரது சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது

அ) வள்ளுவர் கோட்டம் ஆ) கந்த கோட்டம்

இ) தில்லை கோட்டம் ஈ) கணபதி கோட்டம்

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் **8 X 2 = 16**

11.கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

12.“மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது“ - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?

13.கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

14.**பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

1. இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.
2. புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

15.‘தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே’ - தொடருக்குப் பதவுரை எழுதுக.

16.‘பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்’ - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

17.**கீழ்க்காணும் பகுதியைப் படித்துப் பார்த்து, பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக.**

சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போ துமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை; உள்ளூர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு.

18.**உறுப்பிலக்கணம் எழுதுக.** "நினைக்கின்ற"

19.திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம் திருமுறையில் எந்தப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன?

20.**புணர்ச்சி விதி எழுதுக.** "பெருங்கடல்"

**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8**

21.சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

22.இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார் ?

23.'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

25.**இலக்கிய நயம் பாராட்டுக.**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்

பெருமை வாராதப்பா!

சிறப்பு வேண்டுமெனில் - நல்ல

செய்கை வேண்டுமப்பா!

நன்மை செய்பவரே - உலகம்

நாடும் மேற்குலத்தார் !

திண்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார் ! - கவிமணி தேசிக விநாயகம்

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26.“ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு” - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம்குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

27.“கிராம ங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன” - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.